சிந்தனை
தொகுதி VII இதழ் I, II & III - 1995

# நவீன தமிழ்க் கவிதைப் பரப்பில் சோலைக்கிளியின் கவிதைகள் சில அறிமுகக் குறிப்புகள்

செ. யோகராசா

எண்பதுகளளவில் ஈழத்துக் கவிதையுலகினுட் பிரவேசித்த சோலைக் கிளியின் கவிதைகள் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிப் போக்கில் மட்டுமன்றி, பொதுவான நவீன கவிதை வளர்ச்சிப் போக்கிலேகூட முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இவற்றைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

சோலைக்கிளியின் கவிதைகள் உள்ளடக்க ரீதியில் ஏனைய கவிஞர்களது கவிதைகள் போன்று,

"இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத்திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்"

பற்றிப் பேசுவனவாகும். எனவே, இவரது தனித்துவம் வெளிப்பாட்டு முறை சார்ந்ததாகவேயுள்ளது.

சோலைக்கிளியின் ஆரம்பகாலக் கவிதைகளில் அவரது வெளிப்பாட்டுத் திறனைக் காட்டுவனவாக அமைந்தவை அவர் கையாண்ட படிமங்களாகும். இத்தகைய படிமங்கள் பிரமிப்பூட்டுவனவாகவோ புதுமையானவையாகவோ அதிர்ச்சியூட்டுவனவாகவோ பயங்கரமானவையாகவோ அமைந்திருக்கலாம். அவை எத்தன்மையன என்பதைக் கவிதையின் உணர்வுத்தளமே தீர்மானிக்கின்றது. சமகாலச் சமுகத்தின் அச்சநிலை வன்முறை சார்ந்த நிலை அவரது கவிதைகளில் அதிர்ச்சியூட்டும் படிமங்களாக வெளிப்படுவதனைப் பின்வரும் கவிதைப் பகுதி காட்டுகின்றது.

"தொப்பி
காற்சட்டை, சப்பாத்து
இடுப்பில் ஒரு கத்தி மீசை
அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள் இருந்து
குதிக்கின்ற ஒரு காலம் வரும்.
சோளம் மீசையுடன் நிற்காது
மனிதனைச் சுட்டுப் புழுப்போல குவிக்கின்ற
துவக்கை ஓலைக்குள் மறைத்து வைத்து
ஈனும்

பூ மரங்கள் கூட
............... துப்பாக்கிச் சன்னத்தை
அருமிப் அருமிப்
வாசலெல்லாம் சும்மா தேவையின்றிச்
சொரியும்
குண்டு குலைகுலையாய் தென்னை களில்.
தூங்கும்
வற்றாளைக் கொடி நட்டால்
அதில் விளையும் நிலக்கண்ணி"
– தொப்பி சப்பாத்துச்சிசு

இவ்வாறே காதலுணர்வும் காதல் தோல்வியின் துயரமும் ஆரம்ப காலத்தில் காதல் கிறுக்கில் மூழ்கியிருந்த நாட்களும் நினைவுகூரப்படும் போது அவை இத்த கைய படிமங்களாக வெளிப்பட்டுள்ளன.

"வால் மினுங்கும் வெல்வெட்டுப்பறவை
அது முக்குத் தொங்கலில் எச்சம் அடித்தாலும்
அந்நேரம் மணம்தான்
அது ஒரு காலம்
காதல் கிறுக்குத் தலையில் இருந்த
நாம் பெருவிரல் நடந்த நேரம்
அப்போது வானம்
எட்டிப் பிடித்தால் கைக்குப்படுகின்ற
ஒரு முழ இருமுழத் தூரத்தில் இருந்தது.
ஏன் உனக்குத் தெரியுமே
அண்ணாந்து நீ சிரித்தால்
நிலவிற்குக் கேட்கும்
வானுக்கும் உச்சியெல்லாம் பூப்பூக்கும்"
– அந்த வெல்வெட்டுப் பறவை

சோலைக் கிளியின் ஆரம்ப காலக் கவிதைகளில் மட்டக்களப்பு பேச்சுவழக்கு குறிப்பாக முஸ்லீம் மக்களது பேச்சு வழக்குகளும் பிராந்திய மரபுத் தொடர்க ளும் வேறெந்த மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர் களையும் விட பெருமளவு இடம்பெற்றிருந்தன. "மழைப் பழம்", "பேய் நெல்லுக் காயவைக்கும் வெயில்" என்பன இதற்குதாரணங்களாகும். இவை பிராந்திய வழக்குகளாக அமைய, எட்டா வது நரகம் முதலியன சமயச் சார்ந்த பண்பாட்டு வழக்குகளாக அமைந்துள்ளன. இவற்றின் கையாளுகை கவிதையின் உணர்வுத் தளத்திலிருந்து விட்டுவிலகாமல் அதனுடன் இரண்டறக் கலந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

மேற்கூறியவற்றை விட காலப் போக்கில் சோலைக்கிளியின் கவிதைகளில் ஏற்பட்ட சில மாற்றங்களே அவரைத் தனித்துவமுடைய அவ்விதத்தில் முன்னு தாரணமற்ற கவிஞராக்கின. சமகாலச் சமூக நிகழ்வுகளை மாற்றங்களை அஃறி ணைப் பொருட்களூடாகக் கண்டுகொள்வதே அத்தகைய வெளிப்பாட்டு மாற்றங்களுள் முதன்மையானதாகின்றது. இவ்வினுத்தில் சோலைக் கிளியின் பின்வரும் கூற்று இங்கு எடுத்தாளத்தக்கது. அவர் எழுதுகி ன்றார்.

"இயற்கைகளைப் புரிந்து கவிதைக ளோடு தினமும் ஐக்கியப்பட்டுப் போகின்ற ஒருவனுக்கு உலகில் உயிரற்ற பொருட் கள் என்று எதுவும் இருக்க முடியாது.

கல்லுக்கும் கண்ணும் மூக்கும் வாயும் ஆத்மாவும் இருப்பதை நானும் இப்போது தான் காண்கின்றேன். மண்ணுக்குள் மணமும், மனமும் இருப்பதைப் போல இரத்தமும் ஓடுகிறது.

இப்படியான புரிதல்கள் வந்தபின்னர் நான் ஒன்றை உணர்கிறேன். அதுதான் உலகிலுள்ள எந்தப் பொருட்களின் ஆத்மாவின் குரலும் மொழியும் எனக்கும் விளங்கிப் போகிறது.

இல்லையென்றால் தோணியும் தோணியும் காதல் செய்வதைப் பற்றி நானிங்கு எழுதியிருக்க முடியாது. அஃறிணைப் பொருட்களெல்லாம் உயர்திணைகளாக மாறுவது தவிர்க்க முடியாது. ஏனென்றால் பாசமும் நேசமும் நிறைந்த ஒரு மனித னாக கவிஞன் பூமிக்கும் வானத்திற்கும் இடையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அஃறிணை வேறு உயர்திணை வேறு என்று அவனால் பிரிக்க முடியாது. எந்தப் பொருட்களையுமே அவன் இந்த உயிருள்ள ஸ்தானத்தில் வைக்கத் தொடங்கிடுவான்.

சூரியனைத் தூக்கி தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு ஒரு கவிஞன் திரிவது இதனால் சாத்தியமா கிறது. வண்ணத்துப் பூச்சி அவனுக்கு வாகனமாகிப் போவதும் இதனால்தான். முழு உலகமுமே ஓர் உயிருள்ள பண்ட மாக அவன் அனுபவிக்கத் தொடங்கித் தொடங்கி அவன் வேறு பிறவேறு என்று அவனால் பிரித்தப் பார்க்க முடியாததாகி விடுகின்றது.'' (அடிக்கோடு எம்மால் இடப்பட்டது.) (பனியில் மொழி எழுதி - முன்னுரை) மேற்கோள் நீண்டதாயினும் சோலைக் கிளியின் கவிதைகளின் வளர்ச்சி நிலையி னையும் உணர்வுத் தளத்தின் அடிப்படையையும் உணர்த்தி நிற்கின்றன. ஆதாரமாகப் பல கவிதைகள் மேற்கோளா கத் தரப்படுவதைத் தடுத்து விடுகின்றன.

ஆயினும் ஒரு சில கவிதைப் பகுதிகள் அவசியம் கருதி இங்கு தரப்படுகின்றன:

எ-டு : 1

''அருமை
அற்புதம்
அழகு
ஒரு நாயின் தோளில் ஒரு காகம் பயணம்
இந்த மனிதன் வெட்கப்பட வேண்டும்
மனிதம் இவைகளிடம் இருக்கிறது
பொருந்த முடியாத இரு ஜீவராசிகள்
பொருந்திக் கொண்ட வியப்பில் சேவலு
டன் கூடிவிட்டுக் குளிக்க முடியாமல்
நீரின்றி இருந்தகுருவி ஆனந்தக் கண்ணீர்
விட்டே அதனை நீராட்டிக் கொள்கிறது.''
- காக்கை நாய்ச் சவாரி

எ-டு : 2

''நிலவுக்கு வேலியிடு
சூரியனையும் பங்கு போட்டுப் பகிர்ந்து கொள்
வெள்ளிகளை எண்ணு
இன விகிதாசாரப்படி பிரி
நாகரீக யுகத்து மனிதர்கள் நாம்

கடலை அளந்து எடு
வானத்தைப் பிளந்து துண்டாடு
சமயம் வந்தால் காற்றைக் கடத்து

எறும்புக்கும்
இன முத்திரை இடு
மரத்திற்குக் கூட
சாதி சமயத்தைப் புகட்டு
புறா முக்கட்டும்
இன்னொரு இனத்தை நகைத்து''
என் இனத்துப் பேனா யாரால் அழுதது

எ-டு : 3

''புல்லை இனி நான் உண்கிறேன்
கோடி வேலியிலே தழைத்துள்ள சிறுசிலியாக்
கம்பை இனி நான் காருகிறேன்
ஆலங் கொத்தைப் புசிக்கிறேன்
யார் கையை நீட்டினாலும்
துள்ளுகிறேன்
குதிக்கிறேன்

எவரும் தூக்கினால்
இரண்டு கைகளுக்குள்ளும் இருந்து
மே என்கின்றேன்
என் ஆட்டுக்குட்டி!
என் ஆத்மா!
– "ஆட்டுக் குட்டிக்கு அஞ்சலி"

ஏ-டு : 4

இன்று அவன் சொன்ன ஒரு பொய்க்கு
நான்கு தலை
பதினெட்டுக் கண்கள்
வால் இருபத்து மூன்று
கழுத்துகள் பதினாறு.

அந்தப் பொய்தான் எனது பற்களிலும்
கெட்டியாய் ஒட்டியது
யாவரும் இங்கு சமமென்ற பழைய
பெரும் பொய்யைப் போல
நாற்றத்துடன்
– பல்லில் ஒட்டிய பொய்

ஏ-டு : 5

மாமி
என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?
நான்தான்
வெயில் மங்கி நிலா விதைக்க, இருள்
வானம் உழும் நேரம்
ஊர் இருந்து பறந்து வந்து
இந்தப் பெருங் கொப்புள் குந்தியிருக்க
தினம் வரும் குருவி
நீங்கள் என்னைக் கக்கத்தில் இடுக்கி
இருப்பதுபோல இருக்கும்

உங்கள் கொப்புக்குள் இருந்தால் நான்
பார்ப்போர்க்கு
மாமி
ஆமி வந்து உங்களைத் தமது
படைவளவுல் சிறைப்படுத்த
அறுந்தது நமது தொடர்பு
ஆரம்பத்தில்
காற்றில்
இரண்டொரு கடிதம்
பூக்கேட்டு
வேரில்
சப்பாத்துக் காலால் உதைக்கிறான் என்று
சொல்லி
அழுதெல்லாம்
பின் காற்றும் இறந்தது.
நாம் காற்றும் எழுதி வாசிக்கும் எழுத்துகளும்
மறந்தன
மாமி என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?
– படைபோன பிறகுகண்ட என் அலரிமா
மாமி

ஏ-டு : 6

உனது நான்
ஓங்கி நிற்கிறது
மலையாரர்
தேயிலை நடுவதற்கு
மிகச் சிறந்த இடம்
உனது நான்

உனது நானில்
ஓர் அருவியும் ஓடினால் மிக அழகாக
இருக்கும்

நண்பா, உனது நானில்
சிலர்
வீடு கட்ட வருவார்கள்
மிகவும் அடிவாரத்தில் கட்டிக் கொள்ள
வைக்காதே
அவர்களை
உனது நான் சரிந்தால்
சந்தித்தால்
அவர்கள் அழிவர் இல்லையா?
– நண்பரின் நான்

மேலுள்ள கவிதைப் பகுதிகளை
ஆழ்ந்து கவனிப்பின் சோலைக்கிளியின்

கவிதைகளில் அஃறிணை உயர்திணைக் கலப்பு, அவற்றுடனான உறவு-உணர்வுக் கலப்பு என்பன எவ்வெவ் விதங்களில் பரிணாமம் பெற்று வந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

சோலைக்கிளியின் அண்மைக் காலக் கவிதைகள் நுண் மன உணர்வுகளை வெகுநுட்பமாக வெளிப்படுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. பின்வரும் கவிதை அத்தகையது.

கிண்டியெடு
உன்னுடைய படைவீட்டை ஆட்டி அசைத்துப் பிடுங்கி
இந்தக் கடற்கரையில் சுமார் ஆறு ஆண்டுகளாய்
முகாத்திருந்த இந்தப் படைவீட்டின்
கிழங்கைக் கூடத் தோண்டு
மழை வந்தால்
பொச்சென முசாக்காத விதமாய்
நான் வாய்க்குள் போடும் சீனிமணல்
கடற்கரை இது.
தென்றல், தனது கரங்களில் ரோஜாப் பூவை
ஒவ்வொரு மாலையிலும் இந்தக் கடற்கரையில்
வைத்துக் கொண்டே வருவோரை
தடவிக் கொடுத்து
இதயத்தின் கோளாறு திருத்தி
வழியனுப்பி வைக்கும்
தொழில் நுட்ப மேதை
அந்த மேதையை நீ மீண்டும் அழைத்துத் தந்துவிட்டுப் போ போர்வீரா!
நீ இந்தப் பால் நிலத்தில் வந்து குடியிருந்த காலம் முதல்
என் இதயம் இயங்கவில்லை.
அதன் சக்கரங்கள் காற்றுப் போய்
நசிந்து கிடக்கின்றன நெஞ்சுகள் விரைவாய்
உன் படைவீட்டைப் பிடுங்கு
இது இருந்த இடத்தின் மேல் இருந்த வான் கூட
உன் உடுப்பின் நிறத்தில்
மாறி இருக்கிறது
- முடப்படும் கடற்கரைப் படைவீடு

இறுதியாக இன்னுமொன்று கூற வேண்டும். சோலைக்கிளியின் கவிதைகளின் பின்பே நவீன தமிழ்க் கவிதையுலகினுள் சர்ரியலிசப்பாணிக் கவிதைகளின் வரவு ஆரோக்கியமான விதத்தில் இடம்பெறத் தொடங்கின என்பதே அதுவாகும்.

## உசாத்துணை நூல்கள்


சோலைக்கிளி. **நானும் ஒரு பூனை**, கல்முனை. 1981

__________ **காகம் கலைத்தகனவு**, சுவடுகள் பதிப்பகம். சென்னை. 1991.

__________ **ஆணிவேர் அறுந்த நான்**, ஆசியா வெளியீடு. பிரான்ஸ். 1993.

__________ **பாம்பு நரம்பு மனிதன்**, தேசிய கலை இலக்கியப் பேரவை. சென்னை. 1995.

__________ **பனியில் மொழி எழுதி**, விடியல் பதிப்பகம். கோவை. 1996.